11th March 1969]

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, பணம் வாங்காமலேயே ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவதாக வாக்குறுதி கொடுத்துவிட்டுப் போடாமல் இருக்கிறார்களே, அவர்களுக்கு என்ன தண்டனை கொடுப்பது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அப்படியிருந்தும் கூட மக்கள் பரிசைத்தான் அளித்திருக்கிறார்கள் கடந்த இடைத் தேர்தல்களிலே.

Construction of houses for Harijans

* 183. Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the news item which appeared in the "Navamani" of Madras, dated 8th August 1968 to the effect that the Hon. the Minister for Harijan Welfare had stated that the Government would give assistance for constructing houses at a cost of Rs. 3,000, if the Harijans deposited Rs. 400, is correct; and

(b) if so, the details thereof?

அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரிசனங்கள் ரூ. 400 டிபாசிட் செய்தால் ரூ. 3,000-த்தில் வீடு கட்ட அரசு உதவும் என அரிசன நல அமைச்சர் கூறியதாக 1968 ஆகஸ்ட் 8-ஆம் தேதி சென்னை நவமணி நாளிதழில் வெளியான செய்தி சரியா?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ), (இ) இது குறித்த ஒரு செயற்குறிப்பு இந்திய அரசுடன் கடிதப் போக்குவரத்தில் உள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்த பத்திரிகைச் செய்தியைப் பார்த்தவுடனேயே 400 ரூபாய் டிபாசிட் செய்தால் ரூ. 3,000-க்கு வீடு கட்டிக் கொள்ளலாம் என்ற எண்ணம் ஏழை எளிய அரிஜன மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு ஏமாற்றம் இல்லாத முறையில் வீடு கட்டிக்கொள்ள அரசாங்கம் முயற்சி மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாண்புமிகு கனம் உறுப்பினர் அவர்கள் டில்லி அரசாங்கத்தில் தனது கட்சியின் பலத்தை வைத்துக்கொண்டு அந்தத் திட்டத்திற்கு விரைவில் ஒப்புதல் பெற்றுத்தந்தால், அரிஜன மக்கள் ஏமாற்றத்திற்கு ஆளாகமாட்டார்கள்.

[11th March 1969

திரு. என். ஆர். தியாகராஜன் : டில்லியிலிருந்து உதவி யில்லா விட்டாலும் ராஜ்ய சர்க்காரில் இப்படி வீடு கட்டுகிற திட்டம் இருக்கிறதா ? அப்படி கட்டிக் கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ராஜ்ய சர்க்காரில் ஏற்கனவே 1,000 ரூபாயில் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் ஒன்று இருந்து அதில் சரியான முறையில் கட்டிக் கொடுக்கிற வீடுகள் நிரந்தரமாக இல்லாத காரணத்தால் கைவிடப்பட்டது. இப்போது புதிய திட்டங்கள் எல்லாம் உருவாக்கப்படுகின்றன. நாளைய தினம் வேறு மன்றத்தில் வருகிற அரிஜனநல மானியத்தின் கோரிக்கை உரைக்குப் பிறகு அவற்றை வெளியிடுவதாக அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* 184. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that the houses constructed for Harijans between Kallupatti and Kailasapatti on the border of Periakulam Panchayat Union, Madurai district, are lying vacant without any one occupying them during the last two years ; and

(*b*) if so, the reasons therefor?

அரிசன குடியிருப்பு

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சுகாதார, அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்ட பெரியகுளம் பஞ்சாயத்து ஒன்றியப்பு எல்லையில் கல்லுப்பட்டிக்கும், கைலாசப்பட்டிக்கும் இடையில் அரிசனங்களுக்காக கட்டிய வீடுகள் யாரும் குடியேறாமல் சென்ற இரண்டு ஆண்டுகளாக காலியாக இருப்பது உண்மையா ?

(இ) ஆமெனில், காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) வீடுகள் ஒதுக்கப்பெற்றவர்கள் இந்த வீடுகளில் குடியேறிப் பின்னர் அவ்வீடுகளை விட்டுச் சென்றுவிட்டனர்.

(இ) திருடுபோகுமென்று அஞ்சி அவர்கள் அவ்வாறு காலி செய்து விட்டனர்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு அக்டோபர் 2-ம் தேதி பாத யாத்திரை போயிருந்தபோது அந்த வீடுகளைச் சென்று பார்த்தேன். கல்லுப்பட்டி, கைலாசப் பட்டி ஆகிய இரண்டு பெரிய கிராமங்களுக்கும் மத்தியில் இந்த இடம் இருக்கிறது. அது திருடு போகிற இடமல்ல. அங்கே குடியிருக்காத காரணம் அங்கே குடிப்பதற்கு தண்ணீர் கிடைக்க வில்லை என்றுதான் அங்குள்ள அரிஜன மக்கள் கூறுகிறார்கள். ஆகவே தண்ணீர் வசதி, விளக்கு வசதி செய்து கொடுத்தால் அங்கே குடியேறுவார்கள் என்று கூறப்படுகிறது. அதை அரசு கவனிப்பார்களா ?